Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேச தமிழ் ஆய்வு இதழ்

E-ISSN: 3049-0723 Online Volume - 1, Issue - 03, December 2024 Available at: https://tamilmanam.in/

Tamilmanam Research Journal of Tamil Studies
தமிழ்மணம் தமிழ் ஆய்வு இதழ் - A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal

# Dr. Ve. Iraiyanbu's short stories and their portrayal of life values

Dr. B. Aruljothi, M.A., M.Phil., Ph.D., NET,[1] Veerakannan S.,[2]

1.Assistant Professor, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi 642001, Tamilnadu, IN1.
2.Assistant Librarian, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Bharathiar University, Coimbatore
ngmcollegelibrary@gmail.com https://orcid.org/0000-0003-1006-158X

Abstract:

Literature mirrors human life, offering a depth that goes beyond mere surface appearances. While sparking the imagination, it also provides a profound echo of human philosophies. Embodying centuries of lived experience, literature firmly entrenches the virtues and values humanity has pursued and attained. These deeply ingrained ideals encompass truth, hard work, sacrifice, compromise, love, compassion, honor, heroism, and pride in tradition. This article will investigate how these foundational values of human life are manifested in the short stories of Dr. V. Irayanbu.

Keywords: Dr. V. Irayanbu, Tamil Short Stories, Life Values

# முனைவர் வெ. இறையன்புவின் சிறுகதைகளில் வாழ்வியல் விழுமியங்கள்

Dr. B. அருள்ஜோதி, M.A., M.Phil.,[1] Ph.D., NET வீரக்கண்ணன் எஸ்.,[2]

1. உதவிப் பேராசிரியர், நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி 642001, தமிழ்நாடு, IN
2. உதவிநூலகர், நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி,பாரதியார் பல்கலைக்கழகம், கோவை ngmcollegelibrary@gmail.com https://orcid.org/0000-0003-1006-158X

**முன்னுரை:**

இலக்கியங்கள், மனித வாழ்வின் பிரதிபலிப்புகள்; அலங்கரிக்கப்பட்ட முகங்கள். கற்பனையின் ஊற்றாய் இருந்தாலும், மனித வாழ்வியல் தத்துவங்களின் ஆழமான எதிரொலியாய் அவை திகழ்கின்றன. பல நூற்றாண்டுகளின் அனுபவச் சாரமாக, மனித குலம் முயன்று கண்டடைந்த நற்பண்புகளும் விழுமியங்களுமே இலக்கியங்களில் நிலைபெறுகின்றன. உண்மை, உழைப்பு, தியாகம், விட்டுக்கொடுத்தல், அன்பு, கருணை, மானம், வீரம், மரபுப் பெருமை ஆகியவை அவ்விழுமியங்களின் முக்கிய அடையாளங்கள். இத்தகைய மனித வாழ்வின் ஆதாரமான விழுமியங்கள், முனைவர் வெ. இறையன்பு அவர்களின் சிறுகதைகளில் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**முனைவர் வெ. இறையன்பு:**

"சொல்வன்மை, சோர்வின்மை, அஞ்சாமை ஆகிய குணங்களை உடையவரை வெல்வது எவருக்கும் அரிது" என்னும் குறளுக்கு இலக்கணமாகத் திகழ்பவர் முனைவர் வெ. இறையன்பு அவர்கள். எளிய பின்னணியில் பிறந்தாலும், விடாமுயற்சியாலும் கடின உழைப்பாலும் உயர்ந்த அரசுப் பணியில் வெற்றி பெற்றவர். உழைப்பையும் மனித நேயத்தையும் தனது வாழ்வின் உயிர்மூச்சாகவும், பணியின் அழகாகவும் கருதியவர். சமூக மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய மக்களின் வாழ்வோடு ஒன்றிணைந்து, அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேச தமிழ் ஆய்வு இதழ்

E-ISSN: 3049-0723 Online Volume - 1, Issue - 03, December 2024 Available at: https://tamilmanam.in/

இருந்தவற்றை உணர்ந்து களைய முற்பட்டவர். ஒவ்வொரு நொடியும் மனித குலத்தின் நல்வாழ்வுக்காகச் சிந்தித்தவர். எதிரெதிர் அரசியல் சூழல்களிலும் நேர்மை, தூய்மை மற்றும் நடுவுநிலையுடன் உயர்ந்து நின்றவர். பல்வேறு துறைகளில் பணியாற்றி, எண்ணற்ற மனிதர்களின் வாழ்க்கையை அறிந்த அனுபவசாலி. அனுபவங்களை உணர்ந்து, சிறுகதை, புதினம், தன்னம்பிக்கை கட்டுரைகள் எனப் பல வடிவங்களில் எழுதி குவித்த சாதனையாளர். பேச்சாலும், எழுத்துக்களாலும், தனது பணியின் மூலமும் உயர்ந்து, தற்போது தமிழக அரசின் தலைமைச் செயலாளராகப் பொறுப்பு வகிக்கிறார். கற்பனை வளம், கவிதை நயம், அழகான எழுத்து நடை ஆகியவற்றைக் கொண்டு இலக்கியங்களைப் படைத்து, படைப்பாளர்கள் போட்டியில் வென்று பரிசுகளையும் பாராட்டுகளையும் பெறுவதை மட்டுமே இலக்காகக் கொண்டு இவர் எழுதுவதில்லை. மாறாக, மக்களின் வாழ்வை உணர்ந்து, அவர்களுக்கு அறிவுரை கூறி, அவர்களின் வாழ்க்கையைச் சீர்படுத்தி, மனிதம் எனும் உன்னத விளைச்சலைக் காணப் பாடுபடும் ஒரு எழுத்து விவசாயி இவர். ஊக்கப்படுத்துவதும், சிறந்த வழிகாட்டுதலை வழங்குவதும், மக்களை முன்னேற்றுவதுமே இவரது எழுத்துக்களின் முக்கிய நோக்கங்கள்.

முனைவர் வெ. இறையன்புவின் படைப்புலகம் பரந்தது. வ.வே.சு ஐயர், புதுமைப்பித்தன் போன்ற முன்னோடிகள் உருவாக்கிய சிறுகதை மரபில் வந்தவர் இவர். சிறுகதை இலக்கியம் எண்ணிக்கையிலும் தரத்திலும் உயர்ந்திருந்த சூழலில், முனைவர் வெ. இறையன்பு தமது அனுபவ ஞானத்தை பல்வேறு படைப்புகளாக்கித் தருவதில் சிறந்து விளங்குகிறார். அவரது ஆக்கங்களில், கற்ற கல்வியின் பலம், உலகியல் அறிவு, கூரிய சிந்தனை, மனிதம் செழிக்க வேண்டும் என்ற உள்ளார்ந்த வேட்கை ஆகிய தனித்துவமான அம்சங்கள் வெளிப்படுகின்றன.

அவர் எழுதிய கவிதைத் தொகுதிகளான

**வாய்க்கால் மீன்கள், வைகை மீன்கள், பூபாளத்திற்கொரு புல்லாங்குழல் மற்றும் சாகாவரம், அவ்வுலகம், ஆத்தங்கரை ஓரம்** ஆகிய புதினங்கள் குறிப்பிடத்தக்கவை.

மேலும் படிப்பது சுகமே, இலக்கியத்தில் மேலாண்மை, போர்த்தொழில் பழகு, பத்தாயிரம் மைல் பயணம், வையத்தலைமைகொள், ஏழாம் அறிவு (மூன்று பாகங்கள்), ஓடும் நதியின் ஓசை உட்பட சிறியதும் பெரியதுமான 102 கட்டுரை நூல்களைப் படைத்துள்ளார். தொலைக்காட்சி மற்றும் இலக்கிய மேடைகளிலும், பட்டிமன்றங்களிலும் அவரது ஆழமான கருத்துகள் மென்மையான, இனிமையான பேச்சாக வெளிப்படுகின்றன. இறையன்பு அவ்வப்போது எழுதிய சிறுகதைகள் அரிதாரம் (2005), அழகோ அழகு (2009), நரிப்பல் (2009), பூனாத்தி (2012), நின்னினும் நல்லன் (2014) ஆகிய ஐந்து தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. இந்தச் சிறுகதைகள், மனிதர்கள் நெருக்கடிகளைச் சந்தித்தாலும், துன்பங்கள் நிறைந்திருந்தாலும், உயர்ந்த விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைச் சித்தரிக்கின்றன. இறையன்பு, முன்னேறத் துடிக்கும் இளைய தலைமுறையினருக்கு நம்பிக்கை ஒளியாகத் திகழ்கிறார். அவரது படைப்புகள் வாழ்வின் உன்னத விழுமியங்களை மையப்படுத்தி பரவலாக பேசப்படுகின்றன. ந.முருகேச பாண்டியன் தனது தொகுப்புரையில் குறிப்பிடுவது போல, ஆணவம், அதிகாரம், வன்முறை போன்ற எதிர்மறை சக்திகள் கட்டியெழுப்பும் வாழ்வியல் முறையை இறையன்புவின் கதைகள் தகர்க்கின்றன. மனித மாண்பின் உயர்வை வலியுறுத்தும் அக்கறை அவரிடம் இயல்பாகவே உள்ளது. பண்டைய தமிழிலக்கியத்தின் அறச்சீற்றமும், அநீதியைக் கண்டு கொந்தளிக்கும் மனநிலையும் அவரது புனைவுகளில் வெளிப்படுகின்றன. தனது படைப்புகள் மனிதர்களிடையே தெய்வீக உணர்வுகளைத் தூண்டுவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதாக வெ. இறையன்பு கூறுகிறார். மேலும், பெரும் அலைகள் தன்னை அலைக்கழிக்கும் தருணங்களில் கூட, தனது வாசிப்பும் எழுத்தும் மன உறுதியைக் காப்பதாக அவர் சுயஅறிமுகம் செய்கிறார். பசி, வறுமை, கல்வியின்மை, வேலையில்லாத்

E-ISSN: 3049-0723 Online Volume - 1, Issue - 03, December 2024 Available at: https://tamilmanam.in/

திண்டாட்டம், பெண்ணடிமைத்தனம் போன்ற சமூகக் கொடுமைகள் நீங்கி, நாடு பல வழிகளிலும் முன்னேற வேண்டும் என்ற உயரிய இலட்சியத்துடன் அவர் கதைகளைப் படைக்கிறார். நடைமுறை வாழ்வின் உணர்வுகளையும், அன்றாடக் காட்சிகளையும், சம்பவங்களையும் அடிப்படையாகக் கொண்டு, சமகால வாழ்வில் கண்டறிந்த உண்மைகளை கதைகளாக வடிப்பதில் வல்லவர். எளிமை, அறிவுறுத்தும் தன்மை, நற்பண்புகளை விதைத்தல், இளைஞர்களை இலட்சியப் பாதையில் வழிநடத்துதல், நாட்டின் முற்போக்கான வளர்ச்சிக்கு வித்திடுதல் போன்ற சிறப்பியல்புகள் அவரது எழுத்தின் வலிமையாகத் திகழ்கின்றன. இத்தகைய தனிச்சிறப்புகள் வாய்ந்த வெ. இறையன்பு அவர்களின் சிறுகதைகள் வாயிலாக வாழ்வியல் விழுமியங்கள் குறித்த சிந்தனைகளை ஆராய்வோம்.

**சகோதரத்துவம் வலிமை:**

"ஒன்றுபட்டால் வாழ்வுண்டு - நம்மில் ஒற்றுமை நீங்கினால் அனைவருக்கும் தாழ்வு. இதை உணர்ந்து கொண்டால் நமக்கு வேறு என்ன வேண்டும்?" என்ற கூற்று மனிதர்களாகிய நமக்கு மத்தியில் இனம், மொழி, மற்றும் மதம் போன்ற பல்வேறு வேறுபாடுகள் ஏற்படும்போது, அது எதிரிகளுக்கு சாதகமாகிவிடும் என்பதை உணர்த்துகிறது. நம்முடைய வேற்றுமைகள் அவர்களின் மேன்மைக்கு வழிவகுக்கும். ஆகையால், நம்மிடையே காணப்படும் சிறிய வேறுபாடுகளைக் களைந்து வாழ்வது, நமது வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஒரு வழியாகும் என்பதை வெ. இறையன்பு ஐ.ஏ.எஸ் அவர்கள் எழுதிய "அரிதாரம்" கதை மூலம் தெளிவாக விளக்கியுள்ளார்.

"அரிதாரம்" கதையில், புதிதாக வந்த வளர்ப்பு நாயின் தோற்றத்தையும் அதன் வசதியையும் கண்ட அந்த ஊர் தெரு நாய்கள் பயந்து, அதற்கு அடிபணிந்து வாழ்கின்றன. தங்கள் உணவு, சுதந்திரம் என எல்லாவற்றையும் இழந்து அவை அடிமைகளாக வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன. அந்நாய்களில் சில ஒன்றுகூடி, தங்கள் அவல நிலையை உணர்ந்து, அந்நிய நாயை விரட்டத் திட்டமிடுகின்றன. இதையறிந்த அந்த நாய், தொங்கிய காது நாய்களுக்கும் நிமிர்ந்த காது நாய்களுக்குமிடையே ஏற்றத்தாழ்வை உருவாக்கி, பிரித்தாளும் சூழ்ச்சியை பயன்படுத்துகிறது.

'தொங்கிய காது நாய்கள்தான் உயர்ந்தவை என்று கூறப்பட்டதாக செய்தி பரவியதும், நிமிர்ந்த காது நாய்களுக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டது.' ஆனால், இதுவும் அந்த அந்நிய நாயின் சூழ்ச்சியே என்பதை உணர்ந்த நாய்கள், தங்களுக்குள் இருந்த வேற்றுமையை மறந்து ஒன்றுபடுகின்றன. அவற்றின் ஒற்றுமையைக் கண்ட அந்நிய நாய், "இந்த கிராமத்தை நீங்களே நிர்வகித்துக் கொள்ளுங்கள், இது உங்களுக்கே உரியது" என்று கூறிவிட்டுச் சென்றுவிடுகிறது.

அதன் பின்னர், அந்த ஊர் நாய்களுக்குள்ளேயே அவற்றின் பரம்பரை அடிப்படையிலான பிளவுகள் உருவாகின்றன. சில நாய்கள், "அந்த அந்நிய நாயே நம்மை ஆண்டிருக்கலாம். சுதந்திரம் பெற்று என்ன பயன்?" என்று கேட்கின்றன. அடிமைத்தனத்தையும் சுரண்டலையும் அவை ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

மேலோட்டமாகப் பார்த்தால் நகைச்சுவையாகத் தோன்றினாலும், இது கசப்பான அரசியல் சூழலை உணர்த்தி, ஒன்றுபட்டு வாழ வேண்டியதன் அவசியத்தையும், ஒற்றுமையே வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் வழி என்பதையும் ஆசிரியர் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

E-ISSN: 3049-0723 Online Volume - 1, Issue - 03, December 2024 Available at: https://tamilmanam.in/

**நிஜமும்பொய்யும்:**

பொதுவாகச் சிலரை நல்லவர்கள் என்று நாம் நம்புகிறோம். ஆனால், அவர்கள் பொய்யானவர்களாகவும், முகமூடி அணிந்தவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை காலப்போக்கில் உணரும்போது மனதிற்கு வருத்தம் ஏற்படுகிறது. இது மனிதர்கள் மீதான நம்பிக்கையைச் சிதைத்து, எல்லாவற்றையும், எல்லோரையும் சந்தேகிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளிவிடும்.

"நரிப்பல்" கதையில், மாவட்ட ஆட்சியரை அடிக்கடி வந்து சந்தித்த பழநி என்ற நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்தவரைப் பற்றி அறிந்துகொண்டு, அவரது விண்ணப்பத்தை ஆட்சியர் ஏற்றுக்கொள்கிறார். அவர்கள் வங்கியில் வாங்கிய கடனைத் தவறாமல் செலுத்துபவர்கள் என்பதை அறிந்து அவர் மீது நல்ல அபிப்ராயம் வைத்திருந்தார். பழநி பலமுறை தனது கிராமத்திற்கு ஆட்சியர் வரவேண்டும் என்று வற்புறுத்துகிறார். மேலும், நரிப்பல் ஒன்றை அன்பளிப்பாகக் கொடுக்க முன்வருகிறார். ஆனால் நேர்மையான ஆட்சியர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார்.

பழநியின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அடுத்த வாரம் அவரது கிராமத்திற்குச் செல்ல ஆட்சியர் தீர்மானிக்கிறார். அங்குள்ள மக்களுக்குப் பல்வேறு திட்டங்களையும், கடனுதவிகளையும் வழங்க அவர் திட்டமிடுகிறார். ஆனால் வங்கி அதிகாரிகள், அவர்கள் கடனைச் சரியாகத் திருப்பிச் செலுத்தவில்லை என்றும், மேலும் கடனுதவி வழங்கத் தயங்குவதாகவும் தெரிவிக்கின்றனர். ஆட்சியரோ அவர்கள் சரியாகப் பணம் செலுத்துவதாக அறிந்திருந்ததால், இந்தத் தகவல் அவருக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது.

‘நான் எவ்வளவோ திட்டங்கள் வைத்திருந்தேன். தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். முதியோர் கல்வி வகுப்புகள் நடத்த வேண்டும். ஆடு, கோழி வளர்ப்பதற்கு கடன் ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் வாழ்க்கையைச் சிறு படமாக எடுத்து மத்திய தாழ்த்தப்பட்ட பழங்குடிப் பட்டியலில் சேர்க்க வேண்டும்... இப்படி நிறைய ஆசைகள் எனக்கு இருந்தன…’

பின்னர், பழநி மாவட்ட ஆட்சியரை அடிக்கடி சந்திக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி, நரிக்குறவர்களிடம் வங்கிக் கடன் கட்டுவதாகப் பணம் பெற்று அதைச் செலுத்தாமல் தனது சொந்த செலவுகளுக்காகப் பயன்படுத்தியதை அறிந்து ஆட்சியர் வருத்தமடைகிறார். மனிதர்கள் மீதான நம்பிக்கை பொய்யானபோது அவரது மனம் கனத்துப் போகிறது.

அவனை இனிமேல் உள்ளே விட வேண்டாம் என்று அலுவலகப் பணியாளர்களுக்கு ஆட்சியர் எச்சரிக்கிறார். அவர் அந்த கிராமத்திற்குச் செல்வதாக இருந்த அதே நாளில், பழநியும் அவரது மனைவியும் தற்கொலை செய்து கொண்டதை அறிந்து மிகுந்த துயரமடைகிறார். ஊராரிடம் தனது மோசடி வெளிப்பட்டுவிட்டதால் பழநி தற்கொலை செய்து கொண்டதை எண்ணி வேதனை அடைகிறார்.

பழநி அடிப்படையில் நல்ல மனிதன்தான் என்றும், அவனது இழப்பு அவரது இனத்தாரிடம் வெறுப்பை ஏற்படுத்திவிடக் கூடாது என்றும் ஆட்சியர் கருதுகிறார். எல்லாம் நல்லபடியாக முடிந்த பிறகு, பழநியின் அண்ணன் மகன் பாபு, பழநி ஆட்சியரிடம் கொடுக்கச் சொன்னதாக ஒரு பொட்டலத்தைத் தருகிறான். அதில் அந்த நரிப்பல் இருந்ததை ஆட்சியர் பெற்றுக்கொள்கிறார்.

நம்பிக்கைக்குரிய ஒருவன் நம்பிக்கை துரோகம் செய்யும் செயலைச் செய்தாலும், மனிதத்தின் மீதான நம்பிக்கையை இழக்காமல் காத்த ஆட்சியரின் உயரிய பண்பு,

E-ISSN: 3049-0723 Online Volume - 1, Issue - 03, December 2024 Available at: https://tamilmanam.in/

"இன்னாசெய்தாரைஒறுத்தல்அவர்நாண

நன்னயம்செய்துவிடல்"

என்ற மனித விழுமியச் சிந்தனையை இச்சிறுகதை வெளிப்படுத்துகிறது.

**விருப்பமான சிறுகதை மற்றும் இளமைப் பருவ சிந்தனைகள்:**

விருது பெற்ற ஒரு சிறுகதையில், வறுமையான கிராமத்தில் பிறந்து, கடுமையான உழைப்பாலும் தொடர் பயிற்சியாலும் காவல் அதிகாரியாக உயர்கிறார் டிக்காராம். அவருக்குச் சவாலான பணி ஒன்று வழங்கப்படுகிறது: கொடிய கொள்ளையர்களைப் பிடிப்பது. பல இன்னல்களுக்கு இடையே போராடி, கொள்ளைக் கூட்டத் தலைவனைச் சுட்டு வீழ்த்துகிறார். இதனால், அந்த கிராமம் கொள்ளைக்காரர்களின் பிடியிலிருந்து விடுபட்டு நிம்மதி அடைகிறது.

கொல்லப்பட்ட கொள்ளையர்களின் தலைவன் டாகு ராம்சிங்கின் ஆவணங்களை ஆய்வு செய்தபோது, பிற்கால ஆவணங்களில் அவரது பெயர் விடுபட்டிருந்தது. இது அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இதுகுறித்து விசாரிக்கையில், முன்னாள் காவல்துறைத் தலைவர் மகேஷ்சிங்கைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ள அறிவுறுத்தப்படுகிறார். மகேஷ்சிங், இந்தத் தகவலை யாரிடமும் வெளியிட வேண்டாம் என்று எச்சரிக்கிறார். மேலும், முன்பு நடந்த ஒரு போரில் ஒரு கொள்ளைக்காரன் கொல்லப்பட்டதையும், அவன் முகம் சிதைந்திருந்ததால் அவனை ராம்சிங் என்று தவறாக அடையாளம் காட்டியதையும் கூறுகிறார்.

"நான் ராம்சிங்கைச் சுட்டு வீழ்த்தியதாக அரசுக்குத் தகவல் அனுப்பிவிட்டேன். எனக்கு ஜனாதிபதி விருதும் கிடைத்துவிட்டது. இப்போது வேறுவிதமாக அறிக்கை அனுப்பினால், அரசு என்னை வேலையிலிருந்து நீக்கிவிடும்" என்று கெஞ்சுகிறார் மகேஷ்சிங். டிக்காராம் அவரை அமைதிப்படுத்தி, கவலைப்பட வேண்டாம் என்று கூறி, அறிக்கையை மாற்றி, அடையாளம் தெரியாத ஒரு தலைவன் சுடப்பட்டதாகச் செய்தி வெளியிடுகிறார்.

முன்னர் நிகழ்ந்த தவறின் விளைவாக, தான் செய்த வீர தீரச் செயலையும் மறைத்து, சக அதிகாரியைக் காப்பாற்றும் டிக்காராமின் செயல், "பொய்மையும் வாய்மை யிடத்த" என்ற திருக்குறளின் உயர்ந்த விழுமியத்தை மெய்ப்பிக்கிறது.

**இளமைப் பருவத்தின் இலட்சிய வாழ்வு:**

இளமைப் பருவம் என்பது எதையும் சாதிக்கக்கூடிய ஆற்றலும், அறிவாற்றலும், துடிப்பும் நிறைந்த பருவம். இப்பருவத்தில் ஒருவர் தன்னை பல்வேறு வழிகளில் நிலைநிறுத்திக்கொள்ள முயற்சித்தால், நிச்சயம் முன்னேற்றம் காண்பார்.

நம் முன்னோர்கள் இளமைக்காலத்தை பிரம்மச்சரியம் என்று குறிப்பிட்டனர். கல்வி, அறிவு, பணிவு, எதிர்காலத்திற்கான இலட்சியப் பாதையை அமைத்தல் போன்ற நற்செயல்களில் ஈடுபட இதுவே உகந்த தருணம்.

பண்டைய குருகுலக் கல்வி முறையில், தூய்மை, துறவு, சேவை, பணிவு போன்ற நற்குணங்கள் வளர்க்கப்பட்டன. ஆனால், இன்றைய சுதந்திரமான கல்வி முறையில், அறநெறிகள் நிறைந்த இளமைப்பருவம் குறைந்து வருவதை உணர முடிகிறது.

E-ISSN: 3049-0723 Online Volume - 1, Issue - 03, December 2024 Available at: https://tamilmanam.in/

**கல்லூரிக்காதல்சிறுகதையில்ஒருபார்வை:**

கல்லூரி காதல் என்ற சிறுகதையில், கதாநாயகன் சேதுபதி என்ற முதிர்ந்த நண்பரைச் சந்திக்கிறான். அவரது பண்பும் அன்பும் கதாநாயகனை வெகுவாகக் கவர்கின்றன. அதிகம் பேசுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது என்றும், விடுதியில் தங்கிப் படிப்பதால் அதிக நேரம் கிடைக்கும், எனவே நிறையப் படிக்க வேண்டும் என்றும் அவர் அறிவுரை கூறுகிறார்.

கதாநாயகனுடன் படிக்கும் இளைஞர்கள் கேளிக்கைகளிலும், ஊர் சுற்றுவதிலும், திரைப்படங்களிலும், பெண்களைப் பற்றிய எண்ணங்களிலும் மூழ்கிக் கிடக்கின்றனர். ஆனால், கதாநாயகன் தன்னை பல்வேறு வகைகளிலும் மேம்படுத்திக் கொள்ளும் முயற்சியில் உறுதியாக நிற்கிறான்.

சக ஆடவர்கள் அனைவரும் விரும்பும் பேரழகியான மலர்மல்லிகை இவனை விரும்புகிறாள். விடாது அவனை பின்தொடர்ந்து, தன்னைக் காதலிப்பதாகவும் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகவும் கூறுகிறாள். ஆனால் நாயகன், தான் இன்னும் அதற்குத் தயாராகவில்லை என்றும், மேலும் ஐந்து வருடங்கள் படிக்கவும் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளவும் தேவைப்படும் என்றும் கூறி மறுக்கிறான்.

மேலும் அவன் கூறுகிறான்: “வாழ்க்கை என்பது நதியைப் போல ஓடிக்கொண்டிருப்பது, பனிக்கட்டியாக உறைந்து போவது அல்ல. இந்த இடைப்பட்ட காலத்தில், என்னைவிட அறிவான, அழகான, என் மீது அன்பு செலுத்தும் ஒருவர் கிடைத்தால், அவரது தோள்கள் என் தோள்களை விடப் பெரியதாகத் தோன்றலாம். எந்த ஒப்பந்தமும் மாற்றத்திற்குரியதே!” என்று முதிர்ச்சியுடன் விளக்குகிறான். சீரற்ற எண்ணங்களுடன் வாழும் இளைஞர்களுக்கு மத்தியில், கல்வி, இலட்சியம், குறிக்கோள் கொண்ட இந்த இளைஞனைப் படைப்பதன் மூலம் ஆசிரியர், எதிர்கால இந்தியாவின் தூண்களான இளைஞர்களுக்கு வழிகாட்டுகிறார்.

தன்னை வேட்டல் (சுய தியாகம்):

பொதுவாக, நாட்டின் நன்மைக்காகவும், பொது அமைதிக்காகவும் தனிப்பட்ட துன்பங்களைத் தாங்கிக்கொண்டு நன்மையை விளைவிக்கும் மனப்பான்மை கொண்ட மக்கள் இருப்பதால்தான் இந்த உலகம் இன்னமும் நிலைத்திருக்கிறது.

இதனை வலியுறுத்தி, புறநானூற்றின் வரிகளான:

“புகழ்எனில் உயிரும் கொடுக்குவர் பழிஎனின் உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்வுஇலர் அன்னமாட்சி அனையராகி தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மை யானே”

என்ற பாடல் வரிகள் இங்குப் பொருந்துகின்றன.

"துறந்தான் மறந்தான்" சிறுகதையில், மகத நாட்டில் வரலாறு காணாத வறட்சியும் பஞ்சமும் தாண்டவமாடுகின்றன. மக்கள் இறந்து மடிகிறார்கள். எல்லாப் பக்கங்களிலிருந்தும் துயரமான செய்திகளே வந்தடைகின்றன. மன்னர் சந்திர குப்த மௌரியர், துறவி பத்திரபாகுவை சந்தித்து இந்தத் துயர நிலையை மாற்ற ஒரு வழியைக் கேட்கிறார்.

**முதல் பகுதி:**

E-ISSN: 3049-0723 Online Volume - 1, Issue - 03, December 2024 Available at: https://tamilmanam.in/

"சாதாரண மக்கள் இவ்வளவு துன்புறுத்தப்படுகிறார்கள் என்றால், அதிகாரத்தின் உச்சத்தில் இருப்பவர்கள் ஏதோ தவறு செய்திருக்கிறார்கள் என்று அர்த்தம். அந்தத் தவறுக்கான பரிகாரமே இந்த நாட்டைக் காப்பாற்றும் வழி" என்கிறார் அவர். இதனை உணர்ந்த மன்னன், நாட்டில் நிலவும் வறுமையையும் துன்பத்தையும் போக்க, தன் மகனுக்குப் பட்டம் சூட்டிவிட்டுத் துறவறம் மேற்கொள்வதாக உறுதியளித்து செயல்படுத்துகிறான்.

**இரண்டாம் பகுதி:**

"இந்த மகத்தான மகத சாம்ராஜ்யத்தில், அந்த உயிர்த்தியாகத்தால் அனைவரும் நலமுடன் வாழ வேண்டும். சந்திரகுப்த மௌரியன் பதவிக்காக ஆசைப்படவில்லை என்பதை வரலாறு எப்போதும் உணர வேண்டும்" என்று நாட்டின் நன்மைக்காகத் தன் பதவியைத் துறந்து, துறவியாகி உயிரை விடவும் தயாராக இருக்கும் மன்னனின் தியாக மனப்பான்மை வெளிப்படுகிறது. இதன் மூலம், பொதுநலனுக்காகத் தியாகம் செய்யவும் முன்வர வேண்டும் என்ற வாழ்வியல் நெறி வெளிப்படுத்தப்படுகிறது.

**மூன்றாம் பகுதி:**

**நேர்மையின் சிறப்பு:**

நேர்மையான மனிதர்கள் இருப்பதால்தான் இந்த உலகம் இன்னும் நிலைத்து நிற்கிறது. உலகில் இன்னமும் மழை பொழிகிறது. பேரழிவுகளான ஊழிக்காற்று, யுக முடிவு, ஆழிப்பேரலைகள், கடும் பஞ்சம், பெருமழை ஆகியவற்றால் பாதிப்புகள் ஏற்பட்டாலும், எல்லாத் துன்பங்களையும் தாண்டி உலகம் தன்னை மீண்டும் நிலைநிறுத்திக்கொண்டு நீடிக்கிறது.

நேர்மைக்குச் சோதனைகள் அதிகம். அந்தச் சோதனைகளைத் தாங்கும் மனமே நேர்மையின் சிறப்பை உணரும்.

**நாய் பிழைப்பு கதை:**

"நாய் பிழைப்பு" சிறுகதையில், ஜோசப் என்பவர் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிகிறார். அவர் திருவனந்தபுரத்திற்கு மூன்று முறை சென்று வந்ததாகக் கூறி பயணப்படி கோருகிறார். ஆனால், நிதி அலுவலர் கணேசன், அந்த ஊரில் நிறுவனத்தின் கிளை இல்லாதபோது எதற்காகப் பணி நிமித்தமாகச் சென்றார் எனக் கேள்வி எழுப்புகிறார். ஜோசப், கம்பெனி எம்.டி.யின் பீகிள் வகை நாய்க்கான மெத்தை தேடிச் சென்றதாகக் கூறுகிறார். அதற்குப் பயணப்படி தர முடியாது என கணேசன் மறுக்கிறார். ஜோசப்பும், தன் சொந்த செலவில் சென்று வந்ததாகவே இருக்கட்டும் என்று கூறிப் பயணப்படி பட்டியலைத் திரும்பப் பெறுகிறார். கம்பெனி எம்.டி.க்காகத் தான் பட்ட கஷ்டத்தையும், அதற்கான பயணப்படி கிடைக்காதபோதும் அதைத் தன் செலவாகவே கருதும் மனப்பக்குவத்தையும் இக்கதை உணர்த்துகிறது

. நேர்மை சிறுகதையில், அரசு ஊழியர் குப்பன் மரணமடைகிறார். அவரது மறைவுக்குப் பின் கிடைக்க வேண்டிய பணப்பலன்கள் யாருக்குச் சேர வேண்டும் என்பதில் சிக்கல் எழுகிறது. வழக்கம்போல் சட்டதிட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கோபாலன், குப்பனின் முதல் மனைவி தங்கத்திற்கே அந்தப் பணம் சேர வேண்டும் என்கிறார். ஆனால், மனிதநேயத்தை மேலாகக் கருதும் சுப்பிரமணியன், குப்பனின் இரண்டாவது மனைவி செண்பகத்திற்கும், அவர்களின் நான்கு பிள்ளைகளுக்கும்தான் அந்தப் பணம் போய்ச் சேர வேண்டும் என வாதிடுகிறார். சட்டப்படி, குப்பனின் வாரிசாகத் தங்கம் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவர்

E-ISSN: 3049-0723 Online Volume - 1, Issue - 03, December 2024 Available at: https://tamilmanam.in/

குப்பனைப் பிரிந்து சில காலங்களிலேயே மறுமணம் செய்து கொண்டார். செண்பகம் குப்பனுடன் வாழ்ந்து, அவருக்குப் பிள்ளைகளைப் பெற்றெடுத்திருந்தாலும் சட்டப்பூர்வ வாரிசாக அங்கீகரிக்கப்படவில்லை.

இந்தச் சிக்கலைத் தீர்க்க, தங்கத்தைத் தேடிப் போய்ப் பேசுகிறார்கள். வேறு வழியின்றி, மொத்த பணப்பலன்களையும் அவளிடம் ஒப்படைக்கிறார்கள். ஆனால் தங்கம், தான் குப்பனுடன் கொஞ்ச காலமே வாழ்ந்ததாகவும், தற்போது இரண்டாம் கணவர் இறந்திருந்தாலும், குப்பனின் பணப்பலனுக்கு உண்மையான உரிமையாளர் செண்பகமே என்றும் கூறுகிறாள். "சாமி! இந்தப் பணத்துல ஒரு நயா பைசா கூட நான் தொட மாட்டேன். இதுல ஒரு டீ வாங்கிச் சாப்பிடக்கூட எனக்கு உரிமை இல்ல. அந்த மனுஷனோட குடும்பம் நடத்தி, பொங்கிப்போட்டு, புள்ளைங்களைப் பெத்துக்கிட்ட இந்தப் பொம்பளைக்குத்தான் அத்தனை பணமும் சேரணும்," என்று உறுதியாகக் கூறுகிறாள்.

இங்கு, சட்டம் ஒரு தடையை ஏற்படுத்தினாலும், நேர்மையும் மனிதநேயமுமே வெற்றி பெறுகின்றன. சிக்கல் எளிதில் தீர்க்கப்படுகிறது. சட்டப்படி தனக்கே உரிமையானது என்றாலும், ஏழ்மையில் இருந்தும் பிறருக்கு நியாயமாக கிடைக்க வேண்டியதை மறுக்காத தங்கத்தின் செயல், பெயரளவில் மட்டுமல்ல, உண்மையிலேயே அவள் தங்கம் தான் என்பதை உணர்த்துகிறது என ஆசிரியர் முடிக்கிறார்.

இன்றும் கூட, தொலைந்து போன நகைகளையும், பணத்தையும் நேர்மையுடன் ஒப்படைக்கும் சில மனிதர்களைக் காணும்போது, மனிதம் இன்னும் அழியவில்லை என்பதை நினைத்து பெருமை ஏற்படுகிறது. வாழ்க்கை இனிக்கத்தான் செய்கிறது.

சிறு கதை "நின்னினும் நல்லன்"-இல், பொன்னுமுத்து கருப்பச்சாமியிடம் கடன் பெற்றார். குறித்த தேதியில் கடனைத் திருப்பிச் செலுத்த இயலாததால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது பேராசிரியர் முகமது ஷா குறுக்கிட்டு, தனது நிலத்தை விற்று பணம் தருவதற்காக மூன்று மாத அவகாசம் கோரினார். இருப்பினும், அவசர விற்கைக்கான சூழலில் சரியான விலை கிடைக்காததால், மூன்று மாதங்கள் கடந்தும் பொன்னுமுத்துவால் நிலத்தை விற்க முடியவில்லை. இதனால், முகமது ஷா தனது வருங்கால வைப்பு நிதியிலிருந்து கடன் பெற்று, கருப்பச்சாமியிடம் கொடுத்து வாக்குறுதியைக் காப்பாற்றினார். இதையறிந்த பொன்னுமுத்து, தனது நிலத்தை கடனுக்கு ஈடாக கிரையம் செய்துகொள்ளும்படி வேண்டினார். ஆனால் ஷா அதனை மறுத்துவிட்டார். இறுதியில் அந்த நிலம் ஷா பெயரில் பதிவு செய்யப்பட்டது. பயன்பாடற்ற, அதிக மதிப்பு இல்லாத அந்த நிலத்தில் தென்னங்கன்றுகளை நட்டார் ஷா. காலப்போக்கில், அந்நிலத்திற்கு கம்பெனிக்காரர்கள் அதிக விலை கொடுக்க முன்வந்தனர். மூன்று இலட்சத்திற்கு வாங்கப்பட்ட நிலம் ஒரு கோடி ரூபாய் வரை விலை போனது. ஷா பொன்னுமுத்துவிடம் நிலத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு கூறினார். அதற்கு பொன்னுமுத்து, "நல்லா சொன்னீங்கய்யா. நீங்க மட்டும்தான் சோத்துல உப்பு போட்டு சாப்புடுறீங்களா? எங்களுக்கும் மானம் ரோசம் இருக்கு. கொடுத்ததைத் திருப்பி வாங்கற புத்தி எந்தக் கஷ்டத்திலேயேயும் எங்களுக்கு இருந்ததில்லை" என்று உறுதியாக மறுத்துவிட்டார். பொருளாதார நெருக்கடியிலும் தக்க சமயத்தில் உதவி செய்த முகமது ஷாவும், பல மடங்கு மதிப்பு உயர்ந்த பின்பும் விற்று விட்ட நிலத்தின் மீது பற்று வைக்காத பொன்னுமுத்துவும், மனிதம் இன்னும் மரிக்கவில்லை என்பதற்கான சான்றுகள். இத்தகையோராலேயே உலகம் இயங்குகிறது.

முடிவுகள்:

E-ISSN: 3049-0723 Online Volume - 1, Issue - 03, December 2024 Available at: https://tamilmanam.in/

மனிதர்கள் தங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையுடன் வாழ வேண்டியது அவசியம். இல்லையெனில், பிளவுபட்ட சமூகத்தை வெளிப்புற சக்திகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும். ஒற்றுமையே வலிமை என்பதை உணர்ந்து, அடிமைத்தனத்தை வெறுக்க வேண்டும்.

குற்றங்களை மட்டுமே பெரிதுபடுத்தினால் உறவுகள் நிலைக்காது. மனிதர்களிடம் சிறு குறைகள் இருந்தாலும், அவற்றைப் பெரிதுபடுத்தி மனித நேயத்தை சிதைத்து விடக்கூடாது. சிலர் பிறர் நலனுக்காகத் தங்கள் சாதனைகளைக் கூட மறைத்துக் கொள்ளும் உயர்ந்த மனப்பான்மை கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

இளமைப் பருவத்தில் மனதை தேவையற்ற சுகங்களில் திசை திருப்பாமல், திறன்களை வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும். தேசம் எதிர்நோக்குவது இலட்சியப் பார்வையுள்ள இளைஞர்களையே.

பொதுநலனுக்காகவும் நாட்டின் மேம்பாட்டிற்காகவும் நீதியை நிலைநாட்டுவதற்காகவும் தங்களை அர்ப்பணித்த தியாகிகளின் பூமி இது. அவர்களின் தியாக உணர்விலிருந்து இன்றைய இளைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

மானம் காப்பதையே உயிர்மூச்சாகக் கருதிய கவரிமான் போன்ற உயர்ந்த மரபில் வந்தவர்கள் நாம், தமிழர்கள். பிறர் உடைமைகளையோ அல்லது புகழையோ குறுக்கு வழியில் அடைய நினைப்பது நம் சுயமரியாதைக்கு இழுக்கு.

பேச்சில் நிதானமும் தெளிவும் மனிதர்களின் மேன்மையான பண்பு. எந்த சூழ்நிலையிலும் இந்த நற்குணத்தை விட்டு விலகக் கூடாது. பிறர் உழைப்பையும் சொத்தையும் மதிக்கின்ற நேர்மையான மனிதர்களே மனித விழுமியங்களின் அடித்தளம். நல்லவர்கள் ஒருபோதும் வீழ்வதில்லை.

உண்மை, நேர்மை, தியாகம், பற்றற்ற தன்மை, பொதுநலன், சேவை மனப்பான்மை, மனிதநேயமே புனிதமானது என்ற உயர்ந்த எண்ணத்துடன் வாழும் தூய்மை ஆகிய வாழ்வியல் விழுமியங்களே வெ.இறையன்புவின் சிறுகதைகளின் முடிவுகளாக உள்ளன என்பதை ஆய்வு மூலம் அறிய முடிந்தது

. இந்த பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதார நூல்கள் மற்றும் அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

1. **திருக்குறள்:**
   - ஆசிரியர்: திருவள்ளுவர்
   - பகுதி: பொருட்பால்
   - அதிகாரம்: சொல்வன்மை
   - குறள் எண்: 647
   - ஆங்கில மொழிபெயர்ப்பு: ஜி.யு. போப்
   - பதிப்பகம்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
   - முகவரி: 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 98
   - பதிப்பு: மூன்றாம் பதிப்பு, செப்டம்பர் 2012
   - பக்கம்: 133
2. **தேர்ந்தெடுக்கப்பட்ட இறையன்பு சிறுகதைகள்:**

E-ISSN: 3049-0723 Online Volume - 1, Issue - 03, December 2024 Available at: https://tamilmanam.in/

- தேர்வு மற்றும் தொகுப்பு: ந. முருகேச பாண்டியன்
- பதிப்பகம்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
- முகவரி: 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 98
- பதிப்பு: மூன்றாம் பதிப்பு, 2019

3. **பாரதியார் கவிதைகள் தேசிய கீதங்கள்:**
- ஆசிரியர்: மகாகவி சுப்பிரமணிய பாரதி
- பாடல்: வந்தே மாதரம்
- பக்கம்: 124
- பதிப்பாசிரியர்: முனைவர் ச. மெய்யப்பன்
- பதிப்பகம்: தென்றல் நிலையம்
- முகவரி: சிதம்பரம் - 608001
- பதிப்பு: முதல் பதிப்பு, 2000

4. **தேர்ந்தெடுக்கப்பட்ட இறையன்பு சிறுகதைகள்:**
- தேர்வு மற்றும் தொகுப்பு: ந. முருகேச பாண்டியன்
- சிறுகதை: அரிதாரம்
- பக்கம்: 5
- பதிப்பகம்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
- முகவரி: 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 98
- பதிப்பு: மூன்றாம் பதிப்பு, 2019

5. **மேற்கூறிய நூல்:** (தேர்ந்தெடுக்கப்பட்ட இறையன்பு சிறுகதைகள்)
- சிறுகதை: நரிப்பல்
- பக்கம்: 13

6. **திருக்குறள்:**
- ஆசிரியர்: திருவள்ளுவர்
- பகுதி: அறத்துப்பால்
- அதிகாரம்: இன்னா செய்யாமை
- குறள் எண்: 314
- ஆங்கில மொழிபெயர்ப்பு: ஜி.யு. போப்
- பதிப்பகம்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
- முகவரி: 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 98
- பதிப்பு: மூன்றாம் பதிப்பு, செப்டம்பர் 2012
- பக்கம்: 65

7. **இறையன்பு சிறுகதைகள்:** (மேற்கூறிய நூல் - தேர்ந்தெடுக்கப்பட்ட இறையன்பு சிறுகதைகள்)
- சிறுகதை: விருது
- பக்கம்: 99

8. **இறையன்பு சிறுகதைகள்:** (மேற்கூறிய நூல் - தேர்ந்தெடுக்கப்பட்ட இறையன்பு சிறுகதைகள்)
- சிறுகதை: கல்லூரிக் காதல்
- பக்கம்: 57

9. **புறநானூறு:**
- ஆசிரியர்: கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி
- பாடல் எண்: 182
- பக்கம்: 256
- உரை: ஞா. மாணிக்கவாசகன்
- பதிப்பகம்: உமா பதிப்பகம்
- முகவரி: 18, பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை - 600001

E-ISSN: 3049-0723 Online Volume - 1, Issue - 03, December 2024 Available at: https://tamilmanam.in/


- பதிப்பு: நான்காம் பதிப்பு, பிப்ரவரி

10. **இறையன்பு சிறுகதைகள்:** (மேற்கூறிய நூல் - தேர்ந்தெடுக்கப்பட்ட இறையன்பு சிறுகதைகள்)
- சிறுகதை: துறந்தான் மறந்தான்
- பக்கம்: 67

11. **இறையன்பு சிறுகதைகள்:** (மேற்கூறிய நூல் - தேர்ந்தெடுக்கப்பட்ட இறையன்பு சிறுகதைகள்)
- சிறுகதை: துறந்தான் மறந்தான்
- பக்கம்: 70

12. **இறையன்பு சிறுகதைகள்:** (மேற்கூறிய நூல் - தேர்ந்தெடுக்கப்பட்ட இறையன்பு சிறுகதைகள்)
- சிறுகதை: நேர்மை
- பக்கம்: 78-79

13. **இறையன்பு சிறுகதைகள்:** (மேற்கூறிய நூல் - தேர்ந்தெடுக்கப்பட்ட இறையன்பு சிறுகதைகள்)
- சிறுகதை: நின்னினும் நல்லன்
- பக்கம்: 114

துணை நூற்பட்டியல்:

முதன்மை நூல்:

- தேர்ந்தெடுக்கப்பட்ட இறையன்பு சிறுகதைகள். (தேர்வும் தொகுப்பும்: ந. முருகேச பாண்டியன்). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை. மூன்றாம் பதிப்பு, 2019.

துணை நூல்கள்:

1. திருக்குறள். மொழிபெயர்ப்பாளர்: ஜி.யூ. போப் (ஆங்கிலம்). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை. மூன்றாம் பதிப்பு, செப்டம்பர் 2012.
2. பாரதியார் கவிதைகள். பதிப்பாசிரியர்: முனைவர் ச. மெய்யப்பன். தென்றல் நிலையம், சிதம்பரம். முதல் பதிப்பு, 2000.
3. புறநானூறு. உரை: ஞா. மாணிக்கவாசகன். உமா பதிப்பகம், சென்னை. நான்காம் பதிப்பு, பிப்ரவரி 2010.


ஆய்வறிஞர் மதிப்பீடு (Peer Review):

தமிழ் இலக்கிய வெளியில் சிறுகதை, நாவல், மற்றும் சிந்தனை உரைகள் வாயிலாகத் தனக்கென ஒரு நிலையான இடத்தைப் பதித்துக்கொண்டவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப. அவருடைய சிறுகதைகள் பெரும்பாலும் சமூகத்தின் சிக்கல்களை மையப்படுத்தி, அவற்றுக்கான தீர்வுகளை முன்வைக்கும் நோக்கத்துடன் படைக்கப்பட்டுள்ளன. இத்தகைய கதைகளில் பொதிந்துள்ள வாழ்வியல் விழுமியங்களை இக்கட்டுரையாசிரியர் மிகச் சிறப்பாகவும் முழுமையாகவும் தொகுத்தளித்துள்ளார். அயல்நாட்டு இலக்கிய வடிவமான சிறுகதை, தமிழில் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே அறிமுகமாகி இருந்தாலும், அதன் முழுமையான வளர்ச்சிக்கும் உச்சத்தை எட்டவும் சில ஆளுமைகளின் பங்களிப்பு இன்றியமையாதது. அந்த வரிசையில் தற்காலத் தமிழ் இலக்கியத்தில் தனித்துவ முத்திரை பதிப்பவர் வெ. இறையன்பு. அவருடைய கதைகள், சமூக ஒழுங்கு, சமநீதி, மனித மாண்புகள், அறமும் அன்பும் கைகோர்க்கும் தருணங்கள், அரசியல் மற்றும் சட்டச் சிக்கல்களால் உருவாகும் வாழ்வியல் முடிச்சுகள், இன்னும் தீராத மானுடத்தின் உள்ளார்ந்த குறைகள் எனப் பல்வேறு தளங்களில் விரிந்து செல்கின்றன.

E-ISSN: 3049-0723 Online Volume - 1, Issue - 03, December 2024 Available at: https://tamilmanam.in/

காலங்களைக் கடந்தும் நிலைத்து நிற்கக்கூடிய இவருடைய சிறுகதைகளின் சிறப்பை இக்கட்டுரையாசிரியர் தெளிவாகவும் நுட்பமாகவும் எடுத்துரைத்துள்ளார். மேலும், சிறுகதைகளின் ஆழத்தில் சங்க இலக்கியச் சாயல்களும், திருவள்ளுவரின் அறிவுரைகளும் இழையோடி இருப்பதைக் கட்டுரையாசிரியர் வெளிப்படுத்த முயன்றிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

**License**

- Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/.. It allows to use, reuse, distribute and reproduce the original work with proper citation.
- This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Copyright (c) Author